# எப்போதும் உம் நினைவு!

கருணைக் கடலாம்
கர்த்தாவே உம்மை
காலை முதல் மாலை வரை
கருத்துடன் நினைக்கின்றேன்.

நீராடும் நேரத்திலே
நினைக்கின்றேன் நின் தூய்மையை
நித்தமும் என்னைக் கழுவ - இயேசுவே
நீரின்றி யார் தான் உண்டு.

ஆகாரம் முன்னிருக்க
ஆதாரம் உமை நினைப்பேன்
ஆன்மாவுக்கும் பசியுண்டே
ஆண்டவா பசியாற்றும்.

தண்ணீர் அருந்தும் போது
பரமனே உமை நினைப்பேன்
பாவி என் தாகம் தீர்க்கும்
உயிருள்ள பானம் நீரே.

இரவிலே விளக்கேற்றினால்
இயேசுவே உம்மை நினைப்பேன்
இருள் சூழ்ந்த என் வாழ்வில்
இன்றைக்கே ஒளியேற்றும் இயேசுவே.

யூத் டைஜஸ்ட் கவிதைகள்

# எங்கே ஓடுவாய்?

காலமென்னும் சாலையிலே ஓடும் நண்பா
கர்த்தரின் வழியறிந்து நீ ஓடுவாயா?
மாயை இந்த உலக வாழ்வு என்று அறிந்து
மகிமை ஒளி இயேசுவை நீ நாடுவாயா?

சாவை நோக்கிச் செல்லும் கோடி மாந்தர்க்கு
சத்தியத்தின் வழியதனைக் காட்டுவாயா
ஆவலுடன் அனபு கொண்டு அறிவு கொண்டு
அகிலமெங்கும் அவர் புகழை சாற்றுவாயா?

தாகங் கொண்ட தரணி மாந்தர் தாகந்தீர்க்க
வேகங் கொண்டு வீரமுடன் உழைப்பாயா?
மேடு காடு நாடு சென்று சுவிசேஷத்தை
மேன்மை பொங்கும் தன்மையில் நீ
சொல்லுவாயா?

நேரமில்லை நேரமில்லை இல்லை நண்பா
உலகிற்காகச் செலவு செய்ய நேரமில்லை
ஓடு ஓடு ஓடு ஓடு வெற்றியோடு
இயேசு என்ற வழியிலே நீ நாளும் ஓடு.

ஜி. ஜெயசேகர்.

# இம்மானுவேலே உதவும்

இறைவா இறைவா இறைவா – உன்னை
இம்மானுவேலென அழைத்தது சரிதானோ?
எத்தனை தெய்வங்கள் உண்டெனினும் – நாளும்
என்னோடிருப்பது நீயல்லவோ?

இயேசுவே உம்மை மனதில் நினைக்கு முன்னே – நீர்
என் உள்ளத்தில் இருப்பது உண்மையன்றோ?
தீயதை நினைக்கும் பொழுதெல்லாம் – அதன்
தீமையையுரைப்பது நீர் அல்லவோ?

பட்டம் பெற்று வாழ்ந்திருந்தும் – நான்
பாரினில் பண்பாய் இருந்ததுண்டோ?
என்னோடிருக்கும் உன் மனத்தை – என்றும்
ஏற்று வாழ்ந்திட அருள்வாயோ?

எந்தன் வாழ்நாள் அனைத்திலுமே – உம்மை
எண்ணிப் பணிந்திடவே
போற்றி புகழ்ந்து பாடிடவே – என்னை
மாற்ற வல்லவர் நீர் அல்லவோ?

யூத் டைஜஸ்ட் கவிதைகள்

# தீர்மானம்

தித்திக்கும் இளமையிலே திளைத்திருக்கும் என் நண்பா
இத்தரையில் உனைச்சூழ்ந்த எத்தனையோ கோடி ஜனம்
பக்தியின் வழி தவிர்த்து முக்தி நெறி தொலைத்து விட்டு
நித்திரையில் வாழுவதை எத்தனை நாள் பார்த்திருப்பாய்?

*வெற்றி கொடியேந்தி வீர நடை நடந்து வந்து*
*சுற்றித் திரிந்தெங்கும் சுவிசேஷ முழக்கமிட்டு*
*கற்றுத் தரும் வேதக் கருவாளைக் கையேந்தி*
*முற்றும் பகைதீர்க்க முனைந்தே நீ வருவாயா?*

**விண்ணில் பறந்தாலும் வித்தை பல கற்றாலும்**
**பண்ணும் நல்வினைகள் பலகோடி யானாலும்**
**எண்ணும் எண்ணமதில் இயேசு அவர் இல்லையென்றால்**
**புண்ணியமும் ஒன்றுண்டோ புவிதனில் நாம் வாழ?**

*தேவத் திருமகனின் திருவசனம் அறியாமல்*
*பாவத்தில் மடிகின்ற பாவியரை மீட்டிடவே*
*தீபத் திருவிளக்காய் திகழ்ந்திடவே அழைக்கின்றார்*
*சாபத்தின் இருள் நீக்கி சாவதனை வெல்வாயா?*

**சக்திக்கு எட்டும் வரை பக்திக்கே வழிகாட்டி**
**எத்திக்கும் நற்செய்தி இனிச்சொல்வேன் எனக்கூறி**
**புத்தாண்டில் எடுப்போமே புதிதாய் ஓர் தீர்மானம்**
**முத்திரையின் மோதிரமாய் கர்த்தரவர் உயர்த்திடுவார்.**

- டோமினிக்

# புதிய தலைமுறைக்கு

சுதந்திரம் பெற்று விட்டோம்
என்று சொல்லும் சோம்பேறிகளே
தனியே ஒரு பெண்
தலைநிமிர்ந்து போக முடியவில்லையே!
என்ன சுதந்திரம் பெற்றீர்?

கல்விதான் மனக் கண்ணை திறக்கும் என்றீர் – ஆனால்
அந்த கல்வியே
பரிதானம் என்ற உருவில்
படித்தவர் கண்ணை குருடாக்கியதே!
என்ன கல்வி கற்றீர்?

கோயிலுக்காக இரத்தம் சிந்தும்
குருடர்களே
உங்கள் உள்ளமே
கோயில் என்பதை அறியவில்லையோ?

வன்முறை என்ற சிவப்பு மை வேண்டாம்
வறுமையை ஒழிக்கும் நீலமை போதும்
வாருங்கள் புதிய தலைமுறையினரே!
வருங்காலம் உங்கள் கைகளிலே.

*- செல்லப்பா*

# கிறிஸ்து

மனிதனுக்கு இறைவனை தந்திட
இயேசு பெத்தலையில் பிறந்தார்.

இறைவனிடம் மனிதனை மீட்டுதந்திட
இயேசு கல்வாறி சிலுவையில் மரித்தார்.

மரணத்தினின்று உயிர்த்தெழுந்த கிறிஸ்து
மரண பயத்தினின்று உன்னை விடுவிக்கிறார்.

# ஏன்? ஏன்? ஏன்?

உலகை படைத்த உம் கரத்தினை
ஆணிகள் வதைத்திட கொடுத்ததேனோ?
பாவத்தால் கறைபட்ட மானிடனை - உம்
பாசக் கரத்தால் அணைத்திடவா?

உள்ளத்தால் நேசிக்க மறுத்தவர்க்காய் - உம்
உள்ளத்தை உடைக்க கொடுத்ததேனோ?
ஆதியில் பிறிந்திட்ட மனிே உறவினை
மீண்டும் ஒன்று சேர்த்திடவா?

தேவ சாயலை துறந்து நீர்
அடிமையின் ரூபம் எடுத்ததேனோ
சாபத்தால் வாடி வீழ்ந்திட்ட மாந்தரின்
பாவம் போக்கி மீட்டிடவா?

அன்பை இழந்து தவிக்கும் மாந்தர்க்கு
அன்பின் நேசராய் மாறுவதற்கு
அன்பின் பலியாய் மாறினீரே - உம்
அன்பின் மேன்மை தான் என்னே?

# சத்திரம்

சத்திரத்தில் கூட
இடமில்லாத இயேசுவுக்கு
சரித்திரத்தின் மத்தியில்
இடம் கிடைத்து விட்டது.

# புத்தாண்டு

புதிய ஆண்டு பிறந்ததும்
புனிதனாய் மாறிவிட்டாயோ?

பொங்கிய உற்சாகம்
புதியதோர் தீர்மானமாய் உருவானதோ?

போன ஆண்டு தீர்மானம் இன்னும்
புதிதாகவே இருக்கிறதோ?

உற்சாகம் தீர்ந்து போனதால் – அந்த
தீர்மானத்தை மறந்து போனாயோ – அல்லது

தற்கால ஆசைக் கூட்டத்தில்
தொலைத்துப் போட்டாயோ?

# இது எப்படி முடிந்தது?

முத்தம் தந்து காட்டி கொடுத்த
யூதாஸ் காறியோத்தை
சிநேகிதனே என்றீரே
இது எப்படி முடிந்தது உம்மால்?

பரபாசை நேசித்து உம்மை
வெறுத்திட்ட மாந்தர்க்கும்
ஜீவனை கொடுக்க துணிந்தீரே
இது எப்படி முடிந்தது உம்மால்?

மறுதறுத்து நின்ற பேதுருவை
பாசத்துடன் பார்த்து
ஆடுகளை மேய்த்திடு என்றீரே
இது எப்படி முடிந்தது உம்மால்?

உம்முடன் வாழ்ந்திட்ட சீடர்கள்
பிரிந்து ஓடியும்
உங்களுக்கு சமாதானம் என்றீரே
இது எப்படி முடிந்தது உம்மால்?

- மேபல்

# மன்னித்து விடு இறைவா!

மன்னித்து விடு இறைவா!
பாவங்களை மட்டுமே
பிரசவித்து விட்டு
பாவ மன்னிப்பை
அறிக்கையாக வாசித்து விட்டு
மரத்துப் போனது நாக்கு மட்டுமல்ல
எனது இதயமும்தான்!

இதயத் துடிப்பை
உனது இரத்தத்தால் சுத்திகரித்தாய்
நானோ பாவ ரணங்களால்
ஆன்மாவின் கழுத்தை
அநியாயங்களால் நெறிக்கிறேன்
மன்னித்து விடு இறைவா!

மரணம் வெல்லப்பட்டால்
அதுதான் ஜனனம்
பாவப் படுக்கையிலிருந்து
நீ என்னை உயிர்ப்பிக்கும் போதெல்லாம்
மரணத்தை நோக்கியே
எனது கால்கள் ஓடுகின்றன
மன்னித்து விடு இறைவா!

பாவம் மன்னிப்பு இரண்டிற்குமிடையே
எனனி வாழ்க்கையின் ஓட்டம்
மனிதனாக வேண்டும் - எப்படியும்
மனிதனாக வேண்டும் உதடுகள் உச்சரிக்க
சிலுவையின் முன்னே
எனனி முழங்கால்கள் முடங்குகின்றன.

- ஏ. விஜய்

# எது தனி சிறப்பு?

வரலாற்றின் பாதைகளில் எல்லாம்
இரத்தக் கறைகள்
புரட்சி என்ற பெயரில்
குருதி ஆறுகள்!
**நீதி போர்** என்னும் போர்வையில்
சவக்கூட்ட கண்காட்சிகள்
ஆட்சி என்ற பெயரில்
அடக்கு முறை விளையாட்டுகள்!
இவை கடந்த கால உலகத்தின்
கால் தடங்கள்!

இவைகளில்
பெலமிருந்தும்
இல்லாதிருந்தும்
யாரும் போராட தயங்கவில்லை!
உயிர் குடிக்க நாணவில்லை!
கொடூர மொழி பேச கூசவில்லை
அனல் கக்கும் பார்வை வீச தவறவில்லை!

என் தலைவர் இயேசுவோ
வல்லமையும், பெலனுமானவர் - அவரே
மகிமையும் மகத்துவமும் நிறைந்தவர் - ஆனாலும்
அடிமையின் கோலம் பூண்டிட தயங்கவில்லை
சிலுவையில் உயிர் தந்திட நாணவில்லை
அவர் அருளும் அன்பிற்கோர் எல்லையில்லை
இதுதான் கிறிஸ்துவின் தனித்தன்மை!

இப்போது இதில் நாம் வெறுமை
என்னால் அவருவருக்க ஏன் இந்த சிறுமை
ஆயினும் என் மீது அவர் காட்டும் பொறுமை
இதை உணர்ந்தே அர்ப்பணிக்கிறேன் என்னை
அதுவே கிறிஸ்துவின் பார்வையில் அருமை
இனிமேல் என்னால் அவருக்கு பெருமை!

- ராஜீவ் ரூஃபஸ்

# சிதறல்கள்

**வாலிபத்தின் நாட்கள் - ஒரு**
**வசந்த கால நாட்கள் - இங்கே**
**சிந்தனை சிதறல்கள்**
**அத்து மீறல்கள் - இவை**
**அந்த வசந்தத்தின் முட்செடிகள்**
**இளமையில் ஜெப ஜீவியம்**
**இயேசுவிற்காய் வாழும் போது**
**கண்டு கொண்டேன் இதை**
**கிறிஸ்துவுக்கு வாலிபர் மூலம்**
**வாழ்க உம் இறை பணி**
**வளர்க இளையோர் கூட்டம்.**



*- அருள்மணி*

**யூத் டைஜஸ்ட் கவிதைகள்**

# இன்றைய வாலிபர்கள்

சாதனைகளைப் படைத்து பெருமை தரும் **சிம்பல்கள்**
விடா முயற்சியோடு வெற்றி தரும் **கோல்டுகள்**
சோர்ந்திடாமல் உற்சாகத்தோடு உழைக்கும் **விக்டரிகள்**
சுறு சுறுப்பு கொண்டு வரும் **நற்குணசாலிகள்**
நல்லதை உறிஞ்சி கொள்ளும் **தேனீக்கள்**
தேவையற்ற ஆசைகளை சிறையாக்கும் **காவலர்கள்**
தன்னை உருவாக்கிய ஆண்டவருக்கு **நற்கந்தங்கள்**
அன்புக்கு **அடிமைகள்**
தாழ்மைக்கு **உதாரணங்கள்**
மற்றவர்களுக்கு **எடுத்துக்காட்டுகள்**

பலர்

உழைக்காமல் உயர்வை விரும்புகிறவர்கள்
படிக்காமல் பட்டதாரியாக மாறவேண்டும் என்பவர்கள்
அழகாக உடையணிந்து சைட் அடிக்கிறவர்கள்
இடையூறு இல்லாம தூங்குகிறவங்க
ஆசைக்கு இல்லை என்று சொல்லாதவர்கள்
பெற்றோரை அவமதிக்கிறவர்கள்
ஆலோசனையை வெறுப்பவர்கள்
அரசியல் சூதாட்டத்தில் தேறினவர்கள்
தன்னை மறந்து மற்றவர்களை பின்பற்றும் சுய
புத்தியற்றவர்கள்
திட்டமில்லா சோம்பேறிகள்
அணைந்து போன தீவெட்டிகள்
கட்டுபாடற்ற காட்டு மிருகங்கள்
ஜூஸ் எடுத்த கரும்பு சக்கைகள்
யாருக்கும் உதவா செல்லா காசுகள்
சுய அறிவை அடமானம் வைத்தவர்கள்
சிந்தித்து செயல்படாத துருபிடித்த இரும்புகள்
சொன்னால் சொற்கள் வரும் இது போதும்

ஆனால்

வாசித்த நாம் எங்கே இருக்கிறோம்?
யோசியுங்கள் வாழ்வு இதோ
பாதையில் மாற்றமில்லாமல் சென்றால்???
மாற்றிக் கொண்டால்!!!

- ஜாண் சக்திவேல்

**யூத் டைஜஸ்ட் கவிதைகள்**

# உண்மை

நீயும் நானும்
உலக மகா பொய்யர்கள்!
மட்டுமல்ல மகா அயோக்கியர்கள்!

ஆனாலும்

நீ உண்மை மனதுடன்
இயேசுவிடம்
மன்னிப்பு கேட்டால்
உண்மையாய் அவர்
மன்னிப்பதற்கு உத்தமராயிருக்கிறார்!

ஆமாம்

நீயும் நானும்
அறிக்கையிட்டு
மனம் திருந்துவதில்
உண்மை இருந்தால் அவரும்
மன்னிப்பதில் உண்மையாயிருக்கிறார்!
*(1 யோவான் 1:9; யாக்கோபு 5:16)*

# மனிதன்

மனிதன் மனிதனை நேசிப்பது என்பது
தவிர்க்க முடியாத இயற்கை வழி வந்த பண்பு
ஆனால் இந்த நேசத்துக்கு தடையாயிருப்பவை
பேராசையும் ஆதிக்கமும்தான்
இதனாலே உலகம் தொடர்ந்து போர்களை சந்தித்து
வருகின்றது.

மனிதன் பிசாசை நேசிப்பது என்பது
தவிர்க்க முடியாத வழி வழி வந்த தீங்கு
ஆனால் இந்த நேசத்துக்கு தடையாயிருப்பவை
மனசாட்சியும் பரிசுத்தமும் தான்
இதனாலே உலகம் தொடர்ந்து
நியாயத்தை எதிர்பார்த்து நிற்கின்றது!

மனிதன் தேவனை நேசிப்பது என்பது
தவிர்க்க முடியாத சிருஷ்டிப்பின் வழி வந்த அன்பு
ஆனால் இந்த நேசத்திற்கு தடையாயிருப்பவை
உலக சிற்றின்பங்கள் தான்
இதனாலே உலகம் தொடர்ந்து
நரகத்திற்கு சென்று கொண்டிருக்கிறது.

ஓ மனிதனே!
இதில் நீ யாரை நேசிக்கின்றாய்?
மனிதனை? சாத்தானை? இயேசுவை?
இன்றே தடைகளை உடைத்தெறிவோம்
உள்ளத்தில் இயேசு பிறப்பார்
முதலாவது தேவனுடைய ராஜ்யத்தின் நீதியை தேடு
அப்பொழுது நடப்பதெல்லாம் நன்மையாகும்.

யூத் டைஜஸ்ட் கவிதைகள்

# யாரிவர்? யார் நீ?

சின்னவர் ஆயிரம் ஆக்குவார்
பின்னதை நினைத்திடவே மாட்டார்
சிந்தையில் ஏற்று நீ வாழு
பின் தங்கவே மாட்டாய் மகிழு

சிறு பிள்ளை எவரையும் ஏற்றவர்
பிறன் யாரென வார்த்தையாய் வடித்தவர்
சிலகாலம் நீ படும் உபத்திரவம்
பின்மாரியைப் பெற்றிடும் அடையாளம்

சிலுவையை எனக்காய் ஏற்றவர்
பிரிவதைக் காட்டவே மாண்டவர்
சிறுமையை நீக்கிடப் போரிட்டார் – தன்
பிள்ளை நீ என உலகிற்கு சாற்றிட்டார்

யாரிவர்? யாரிவர்? யாரிவர்?

சிறுமையில் உயர்வைக் கொடுத்தவர்
பிறப்பில் தாழ்மையைத் தரித்தவர்
சிக்கலில் மீட்பைத் தருபவர்
பிரிவில் மேன்மையைத் தந்தவர்

சிற்பி நீ தேவா சிற்பி நீ உலகின்
அற்புத சிற்பியல்லவா?

பிரியம் நீ என்றழைத்தவா தேவா
நீ மட்டும்
பிரியம் நீ என்றழைத்தாய் என்னை
யார் நீ மனிதா யார் நீ
சிறுவன் தாவீதின் வரம் பெற்றவன்
உள்ளத்தின் உரம் பெற்றவன்

யார் நீ மனுஷி? யார் நீ?

பிள்ளையற்ற எலிசபெத்தை
பாக்கியவதியாக்கிய
தேவபெலம் பெற்றவன்

ஜெபி ஜெபி ஜெபி

நீ பாக்கியசாலி
செயல்படு செயல்படு
செயல்படு
நீ பலசாலி

- எஸ்தர்.

# உதிராத மலர்

மலர்கின்ற மலரெல்லாம்
மணப்பதில்லை
மயக்குகின்ற மலரென்றாலும்
நிலைப்பதில்லை.

உதிராத மலரன்றோ
காயாகி கனியாகி
பலனைத் தரும்!

இயேசுவே!

உம்மில் நான் கனிகொடுக்க
உதிராத பூவாக மலரச் செய்யும்
இறையருள் மணம் பரப்பும்
திருமறையின் மலர்ச் சுரங்களோடு
மாற்றிவிடும் என்னையே!

- வஷ்ணி ஏர்னஸ்ட்

# இயேசுவும் என் உறவும்

இயேசுவின் உள்ளமோ சுத்தமான white

அவரின் உருவமோ மிக மிக Smart

அதனால் அவருக்குக் கொடுத்தேன் என் Heart

அந்நேர முதல் எங்களுக்குள் உருவானது நெருக்கமான Relation

அன்றிலிருந்து எனக்குள் அவருடைய கிருபை Start

அவர் என் மீது வைத்திருக்கும் அன்பிற்கு இல்லவே இல்லை
Extent

என்றும் அவருக்குள் நிலைப்பதே எனக்கொரு தனி Taste

அவ்வாழ்க்கைதான் உயிருள்ளது என்பது என் Stand Point

சாத்தான் எனக்கு எதிராக விரோதத்தை தூண்டினால் அவரிடமிருந்து
உண்டு நிச்சயம் Support

இயேசு இல்லாத வாழ்வு வாழும் அனைவரும் இப்புவியில் பிறந்ததே
Waste

அவ்வாறு வாழ்ந்தால் அவர்களுக்கு கண்ணீரே Remnant

– மாரி, பாளையங்கோட்டை.

யூத் டைஜஸ்ட் கவிதைகள்